# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ ஆவணி 1984 ★ இதழ் 104


## முருங்கை நாகரிகம்




தென்னிலங்கையெங்கும் ஈரப்பலாக் காய்க்கறி மணக்கும் இல்லங்கள் போல, வடஇலங்கை கிழக்கிலங்கையெங்கும் முருங்கைக்காய்கறி மணக்கும் இல்லங்கள் நிறைந்த காலம் ஒருகாலம். முருங்கைக் காய்த் தீயல்கறி முதல்நாளில் சமைத்த தாயினும் அது அடுத்த நாளிலும் பழுது படாது பயன்தருவது. முருங்கைக்காய்த் தீயலுக்குப் பலாக்கொட்டை கொண்டாட்டம். முருங்கைக்காய் அவியற்கறி கத்தரிக் காயும் சேர்த்தால் அமிர்தம். வெள்ளைக் கறிவகைகளில் அதைவிட விசேடமானது கிடையாது. ஒரு முருங்கைக்காய்த் துண்டில் இரண்டு சுவை கொடுப்பது பொரித்துக் காய்ச்சிய கறி. அதாவது முருங்கைக்காய்த் துண்டுகளை ஒருபக்கம் எண்ணெயிற் தோயுமாறு பொரித்து எடுத்துவைத்த குழம்பு இரண்டு சுவை தரும்.

பத்தியத்துக்குப் பயன்படும் முருங்கைக்காயைப் போன்ற இன்னொரு மரக்கறி வகை இவ்வுலகில் இல்லை. கூட்டரைத்து உள்ளி, மிளகு, சீரகம்

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)



இமயசோதி
**சுவாமி சிவானந்தர்**
தினத்தில்
அவருடைய தெய்விக
வாழ்வு நூலைத்
தொழிலதிபர்
க. கனகராசா
வெளியிட்டு வைத்தார்.

★ அமைதியான முறையிலேதான் பிறரைத் திருத்தலாம் ★

உ
சிவமயம்






## திருநாவுக்கரசுநாயனார் தேவாரம்
## திருமுதுகுன்றம் – திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

தக்கனது பெருவேள்வி தகர்த்தா னாகித்
தாமரையான் நான்முகனுந் தானேயாகி
மிக்கதொரு தீவளிநீர் ஆகா சமாய்
மேலுலகுக் கப்பாலாய் இப்பா லானை
அக்கினொடு முத்தினையு மணிந்து தொண்டர்க்
கங்கங்கே அறுசமய மாகி நின்ற
திக்கினையென் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே.

திருச்சிற்றம்பலம்

தக்கபிரசாபதி அகந்தையோடு செய்த பெருவேள்வியைத் தவிடுபொடியாக்கியவருமாகி, பிரமன், திருமால் ஆகிய மூர்த்தங்களைக் கொண்டவருமாகி, வலிமை வாய்ந்தனவாகிய தீ, வளி, நீர், ஆகாயம், மண் என்னும் பஞ்ச பூதங்களானவருமாய், அவற்றுக்கு அப்பாலாயும் இப்பாலாயுமுள்ளவராகி, எலும்பையும் முத்தையும் வெறுப்பு விருப்பின்றி ஒப்ப நோக்கியணிந்தவருமாகி, தொண்டர்களுக்கு ஆங்காங்கே ஒன்றுக்கொன்று மாறுத வீறுடைய அகச்சமயங்கள் ஆறிலும் தோன்றியருள் புரிவருமாகி, அவர்களுக்கெல்லாம் தாமே கதியாகவுள்ள வருமாகி, திருமுதுகுன்றம் என்னும் திவ்விய திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனைக் கெடுவினையேன் அறியாது மயங்கி நின்றேனே.

## இலுப்பைக் கொட்டை

பிறமாவட்டங்களில் கிடைக்கும் அளவில் இலுப்பைக் கொட்டை யாழ்ப்பாணத்தில் கிடைப்பதில்லை. நாம் இலுப்பை அபிவிருத்திக்கு ஒரு இயக்கம் ஆரம்பித்தல் அவசியம்போலும். இலுப்பைக் கொட்டை பெருமளவில் வேண்டும். இப்போதே சொல்லிவைக்கிறோம்.




## மெய்யுணர்தல்

தத்துவஞானம் அறிதல். அஃதாவது நிலைத்த பொருளினை நுகர்வால் அறிதல்.

**கற்றுஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்று ஈண்டு வாராநெறி.**

மெய்யாசிரியரிடம் படிப்பதற்குரியதை இப் பிறப்பிலே கேட்டறிந்து, உண்மைப் பொருளை உணர்ந்தவர்கள் மீண்டும் இவ்வுலகத்துக்கு வாராத உயர்ந்த நெறியினை அறிவார்கள்.


### True Knowledge

After learning what has to be learnt from a good teacher and has realised the truth, will reach that path that will not take one back here to this world.

## 1984 ஆகஸ்ற் மாத நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 2. | வியாழன் | — நல்லூர் கந்தன் கொடி |
| 3. | வெள்ளி | — பின்னிரவு 2–07 அட்டமி |
| 4. | சனி | — அட்டமி – நவமி |
| | | — சுந்தரமூர்த்திநாயனார் பூசை |
| 5. | ஞாயிறு | — நவமி முன்னிரவு 10–23 வரை |
| 7. | செவ்வாய் | — ஏகாதசி விரதம் |
| 9. | வியாழன் | — பிரதோச விரதம் |
| 10. | வெள்ளி | — வரலட்சுமி விரதம் |
| 11. | சனி | — பூரணை விரதம் (போயா) |
| 16. | வியாழன் | — இராமகிருஷ்ணர் தினம் |
| 17. | வெள்ளி | — ஆவணி – பிறப்பு |
| 19. | ஞாயிறு | — கார்த்திகை விரதம் |
| 20. | திங்கள் | — முற்பகல் 9–49 அட்டமி உறியடி உற்சவம் |
| 21. | செவ்வாய் | — நவமி முற்பகல் 10–00 வரை |
| 22. | புதன் | — கலாயோகி ஆனந்தக்குமாரசாமி தோன்றிய தினம் |
| 23. | வியாழன் | — ஏகாதசி விரதம் |
| 24. | வெள்ளி | — பிரதோஷ விரதம் |
| 25. | சனி | — நல்லூர் கந்தன் தேர் |
| 26. | ஞாயிறு | — அமாவாசை, நல்லூர் தீர்த்தம் செல்வச்சந்நிதி கொடி |
| 27. | திங்கள் | — நல்லூர் பூங்காவனம், துர்க்கையம்மன் கொடி |
| 30. | வியாழன் | — விநாயக சதுர்த்தி விரதம் |

★ உள்ளம் உயர்ந்தால் சாந்தம் உண்டாகும் ★



## சிறுவர் பகுதி

## அவிழ்த்துப் பாருங்கள்

1. கிட்டவுள்ள பட்டணத்தை எட்டிப்பார்க்க முடியாது
2. தொந்தி வயிறன் சந்தையிலே குந்தியிருக்கிறான்
3. சும்மாவும் இருக்காது சொல்லவும் மாட்டாது
4. ஏழு மைலுக்கப்பால் எருமைக் கடா கத்துகிறது
5. இவ்வளவு ஆள், அவ்வளவைச் சுமக்கிறான்

1. முதுகு. 2. பூசினிக்காய். 3. குழந்தை. 4. புகையிரதம். 5. அடுப்பு.

## நீதிசாரங்களான வாழ்க்கை அநுபவங்கள்

1. ஆசையை அறவே நீக்கினவர்கள் ஆனந்தமாக வாழ்ந்தார்கள்.
2. நேர்மையாக வாழ்ந்தவர்கள் பல சோதனைகளுக்காளாகி ஈற்றில் பெருவெற்றி கண்டார்கள்.
3. இல்லற வாழ்விலும் கூட்டுறவு அடிப்படையில் தம் தம் கடமைகளைச் செவ்வனே செய்தவர்கள் இன்பங் கண்டார்கள்.
4. முட்டாள்கள் மத்தியில் அறிவாளிகள் தங்கள் வித்துவத்தன்மையைக் காட்டுவதால் பெரிய துன்பம் உண்டாகும்.
5. மாணுக்கர் மாணுக்கியராய்க் கல்வி பயிலுங் காலத்தில் நல்லொழுக்கம் உள்ளவராயிருத்தல் அவர்களுக்குப் பாதுகாப்பையும், ஆற்றலையும் கொடுக்கும்.
6. நாட்டில் அதர்மம் தலையெடுத்தால், தர்மம் தலைகுனிவதைத்தவிர வேறு மார்க்கம் கிடையாது.
7. நிர்வாணமாக வாழ்பவர் மத்தியில் கோவணம் கட்டியவன் பைத்தியக்காரனுகக் கணிக்கப்படுவான்.

### மீனுட்சி அடியார்கள்

அமெரிக்காவில் மீனுட்சி அம்மன் கோயில் உருவாகிய பிரதேசத்திலே 10,000 இந்தியக் குடும்பங்கள் வாழ்கின்றூர்கள் என்ருல் பேசவாவேண்டும். இவர்களுக்குத் தமிழ் நாட்டுத் திராவிட பாணியில் கோயிலமைந்துள்ளது.

மீனுட்சி அம்மனுக்கு சுந்தரேசர் இணைபிரியாது எழுந்தருளியுள்ளார். எனவே இதனை மதுரை மீனுட்சி சுந்தரேஸ்வரர் கோயிலமைப்பு என்று கருத இடமுண்டு.

## குப்பிளான் தெற்கு சனசமூக நிலையம்

7-7-84 சனிக்கிழமை குப்பிளான் தெற்கு சனசமூக நிலையத்தினர் நடாத்திய 2-வது ஆண்டு விழாவில் பெரும் தொகையான மக்கள் மத்தியில் மில்க்வைற் தொழிலதிபரின் சேவைகளுக்கும், உபகரிப்புகளுக்கும் நன்றி பாராட்டி விழாவில் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியத்தின் கௌரவ பொதுச் செயலாளர் திரு. சி. சி. வரதராசா அவர்கள் நன்றி பாராட்டியதோடு, தொழிலகத்தின் தயாரிப்புகளுக்கு அமோக ஆதரவளித்தல் வேண்டும் என்றும், அதனுல் தொழிலதிபர் சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா சமாதான நீதவான் அவர்களின் அறப்பணிகள் மேன் மேலும் பெருகும் என்று வெகுவாகப் பாராட்டி உரை நிகழ்த்தினுர் என மேற்படி சனசமூக நிலையச் செயலாளர் திரு. வ. உருத்திரலிங்கம் அறியத்தருகிறுர்.

## Give one word for:

1. An organ hearing
2. Cloth made of flax
3. To go on horse back
4. Large bird with big eyes
5. Water which falls from clouds
6. How you address a gentleman
7. Shallow pot used for frying
8. Go into a house
9. Measure of land
10. Machine used for lifting
11. Top floor under the roof
12. Divice for catching animals
13. Minute part that makes a bomb
14. What your thighs form when you sit down
15. Metal in natural state
16. Style of walking
17. To drink little by little
18. To hold firmly

1. Ear 2. Linen 3. Ride 4. Owl 5. Rain 6. Sir 7. Pan 8. Enter 9. Acre 10. Crane 11. Attic 12. Trap 13. Atom 14. Lap 15. Ore 16. Gait 17. Sip 18. Clutch

## வேலணை மேற்கில் முன்மாதிரி

வரண்ட பகுதிகளில் பசுமைகாணச் செய்தல் மகத்தான பணி. வேலணை மேற்கு நடராச வித்தியாலயம் சிறிதாக அமைந்தபோதிலும் அங்கே பரவலாகப் பெரும் பணி நடைபெறுகின்றது. பிள்ளைகளுக்கு நல்ல பசுமையான சூழலைச் செய்தவர்கள், அங்கு நல்லதொரு நூலகத்தையும் ஆரம்பித்து நடத்துவதற்குத் தொழிலதிபர் கனகராசா அவர்களை நாடினுர்கள். தொழிலதிபர் உதவியால் நூலகம் நல்ல முறையில் நடைபெறுகின்றது.

★ தர்மத்தின் ஓர் அம்சமாயுள்ளது அறம் ★

## மில்க்வைற் செய்தி மிகுந்த பயன் தருவது

1. சின்னஞ் சிறிசடா தம்பி — மில்க்வைற்
 செய்திஇதழ் இந்தத் தேசத்தில்! ஆனால்
பென்னம் பெரிசடா தம்பி — அது
 பேணிவருகின்ற சேதிகள் எல்லாம்!

2. பெற்றுப் பயிலடா தம்பி — அதைப்
 பேணி ஒருபுறம் வையடா தம்பி!
கற்றிடக் கற்றிடத் தம்பி — பெருங்
 கடலினைப் போலவே அறிவும் பெருகும்!

3. என்னஉன் தேவைகள் தம்பி — அவை
 எல்லாமிச் செய்தியில் உண்டடா தம்பி
முன்னைப் பழமையும் உண்டு — தம்பி
 மோதிடும் பின்னைப் புதுமையும் உண்டு!

4. எல்லோரிடத்திலும் சொல்லு — தம்பி
 இலவச மாயதை நீபெற வேண்டில்
நல்லசவர்க் காரத்தின் மேல் உறை
 நாளை அனுப்பு! வரும்! படி! வை! போ!

— தாமரைத்தீவான் —

---

## தமிழில் வழங்கும் வட மொழிகள் சில

| | | |
|---|---|---|
| மகாத்மா | — | பெரியோன் |
| மகாபாதகம் | — | பெருந்தீவினை |
| மகாபாடியம் | — | அகலவுரை |
| மகாலட்சுமி | — | திருமகள் |
| மகிடம் | — | எருமை |
| மகிமை | — | பெருமை |
| மகுடம் | — | முடி |
| மகேசன் | — | சிவன் |
| மகேசுவரி | — | உமை |
| மகோதரம் | — | பெருவயிறு |
| மகோற்சவம் | — | திருவிழா |
| மங்கலவாரம் | — | செவ்வாய்க்கிழமை |
| மயானம் | — | சுடுகாடு |
| மச்சம் | — | மீன் |
| மஞ்சம் | — | படுக்கை |
| மஞ்சனம் | — | குளித்தல் |
| மண்டுகம் | — | தவளை |
| மதம் | — | வெறிநீர், நெறி |
| மது | — | கள், தேன் |
| மதுரம் | — | இனிமை |
| மத்தம் | — | வெறி |
| மத்திமம் | — | நடுநிலை |
| மத்திமை வாக்கு | — | மிடற்றோசை |
| மத்தியஸ்தம் | — | நடுநிலைமை |
| மத்தியானம் | — | நண்பகல் |

## Learn Your English

**I. Give one word for each of the following:-**

1. A loan with house or land as security.
2. A written declaration of oath.
3. An amount to be paid in insurance.
4. The path lined with trees.
5. The shape of a new moon.
6. Narrow passage between rows of seats.

**Answers:**

1. mortgage  2. affidavit  3. premium
4. avenue  5. crecent  6. gangway

**II. Write down the opposite of the following by using a prefix:**

| | |
|---|---|
| 1. concordant | 2. exclude |
| 3. benediction | 4. prologue |
| 5. orthodox | 6. progressive |
| 7. introvert | 8. ill - favoured |
| 9. pre - war | 10. ill - natured |

Answers:

| | |
|---|---|
| 1. discordant | 2. include |
| 3. malediction | 4. epilogue |
| 5. heterodox | 6. regressive |
| 7. extrovert | 8. well - favoured |
| 9. post - war | 10. good - natured |

**III. Give the plural forms of these:**

1. half  2. handkerchief  3. knife  4. safe
5. mouse  6. goose  7. summons  8. mongoose

**Answers:**

1. halves  2. handkerchiefs  3. knives  4. safes
5. mice  6. geese  7. summons  8. mongooses

**IV. With what are the following concerned?**

| | |
|---|---|
| 1. astronomy | 2. bibliography |
| 3. ethrology | 4. entomology |
| 5. toxicology | 6. gastronomy |
| 7. meteorology | 8. philately |
| 9. ceramics | 10. numismatics |

**Answers:**

| | |
|---|---|
| 1. heavenly bodies | 2. books |
| 3. races of mankind | 4. insects |
| 5. poisons | 6. good food |
| 7. weather, atmosphere | 8. stamps |
| 9. pottery | 10. coins |


---

### மண்டைதீவு அம்மன் ஆலயத்தில்

இவ்வாலயத்தில் இவ்வாண்டு நடைபெற்ற பொங்கல் விழாவின்போது, சிறுவர்கள் போதியளவு பங்குபற்றுவதற்கான சூழ்நிலை உருவாகியபோது, நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் பலர் ஈடுபட்டுப் பரிசுகளும் பெற்றார்கள்.

---

★ தானம் என்பது வேறு, தர்மம் என்பது வேறு ★



## பகவத்கீதை

அசூசியில்லாமல் அதிஇரகசியமான ஞானத்தை அறிபவன் தீமையிலிருந்து விடுபடுகிறான்.

ராஜவித்தை, ராஜரஹஸ்யம், தூய்மை தருவதில் மாட்சிமையுள்ளது. கண்ணெதிரே காண்டற்குரியது. அறத்துக்கியைந்தது. செய்வதற்கு எளிதானது. அழிவற்றது.

அவா, குரூரம், மயக்கம் என்பன ராட்சச அசுர மோகினி சக்திகள். வீணாசையுடையோர், வீண்செயவாளர், வீணறிவாளர் மதியற்றோர் மயக்கத்துக்கு இடமான இவற்றைச் சார்ந்து நிற்கின்றனர்.

## பிறநாட்டவர் இப்படியும் சொன்னார்கள்

1. ஒரே கல்லில் இரண்டுமுறை தடக்கினால் அவமானம்.
2. அதிகாரியிற் பிழைகாணாத ஊழியனை நம்பலாகாது.
3. உண்மை என்பது தத்துவஞானத்தின் குறிக்கோள்.
4. பேச்சினால் பகைவர்கள் அதிகரிக்கிறார்கள்.
5. கற்பனைகள் கடற்பிரயாணத்திலும் சுலபமானவை.
6. மகிழ்ச்சியின் மனநிலையை வாயாற் சொல்ல முடியாது.
7. சில புத்தகங்களின் பின் பக்கம் அழகாயிருக்கும்:
8. தர்மம் தங்கள் வீட்டிலும் நீதி அடுத்த வீட்டிலும் ஆரம்பிக்கும்.
9. கெட்டவர்கள் இல்லாவிடின் நல்ல சட்டத்தரணிகள் இரார்.
10. தன்னை அறிதல் கடினம். பிறர்க்கு உபதேசித்தல் சுலபம்.
11. அறிவுதான் ஒரே ஒரு நன்மை. அறியாமை ஒரே ஒரு தீமை.
12. கலியாணம் முடித்தாலும் முடியாவிட்டாலும் கவலைதான்.
13. நம்பிக்கை என்பது நடமாடும் மனிதனின் கனவு.
14. கற்றவர் வாழ்வுக்கும், கல்லாதவர் பிணத்துக்கும் சமானம்.
15. உண்மை என்பது நீதியின் நடைமுறை.

முற்றொடர்:-

## ஒருவரிப் பழமொழி

81. உறங்கும் நரிக்கு உணவு கிடையாது
82. கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது
83. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது
84. அள்ளாதது குறையாது. இல்லாதது பிறவாது
85. ஆகாயத்தில் எறிந்த கல் அங்கே நிற்காது
86. ஆற்று மண்ணை எண்ண முடியாது
87. இரவு பகல் எக்காலத்திலும் உண்டு
88. கண் குருடானாலும் தூக்கம் வரும்
89. கசப்பு இனிப்பாகாது, கறுப்பு வெளுப்பாகாது
90. துலக்காத ஆயுதம் துருப்பிடிக்கும்
91. பிள்ளை பிறந்தபின்தான் பெயரிடலாம்
92. மயிர் சுட்டுக் கரியாகாது
93. வாழை இருமுறை குலை ஈனாது
94. அவித்த பயறு முளைக்காது
95. காடு எரிந்தால் சந்தன மரமும் எரியும்
96. உபசார வார்த்தையால் பசி தீராது
97. கபடச் சொல்லிலும் கடிய சொல் நல்லது
98. கெடுப்பதும் வாய் படிப்பதும் வாய்
99. சொல்லில் நிதானம் சுகத்தைக் கொடுக்கும்
100. சொல்லில் வல்லவனை வெல்லுவது அரிது

## கவலை

கவலை, கவலை, ஓயாத கவலை. ஒழியாத கவலை: கவலை மனிதருக்கு மாத்திரம்தான் உரிமைபோலும், கவலையைப் பற்றித் தமிழ்ப் புலவர்கள் ஏராளமான பாடல்கள் பாடியிருக்கிறார்கள். மனக்கவலை மாற்றல் அரிது என்பது திருவள்ளுவர் குறள்.

கவலையைப் பற்றி மேற்கு நாட்டு மனோதத்துவ நிபுணர்கள் நன்றாக ஆராய்ந்திருக்கிறார்கள். என்றும் நடக்காதவற்றை நினைத்துக் கவலை அதிகம். சிறிய விடயங்களையிட்டுக் கவலை, கடந்தகால நிகழ்ச்சிகளையிட்டுப் பழஞ்சலிப்புக் கவலை. இவை எல்லாம் தேவையில்லாத கவலை. கவலையில்லாத மனிதன் இல்லை. என் கவலையை எடுத்துக் கொண்டு உன் கவலையைத்தா என்று ஒருவர் கேட்டால் மற்றவர் மறுத்துவிடுவார். கவலை மனிதனைச் சிந்திக்க வைக்கிறது.

## மலச்சிக்கல்

இரண்டு அடக்கேல் என்பது நோயணுகா விதி. ஒன்றுக்கு வருவதும் இரண்டுக்கு வருவதும் நாகரிகமான சொற்கள். அவை சலம் மலம். மலம் சிக்கினால் தலைவலி, வாந்தி, காய்ச்சல், மூல வருத்தம், குடல் வருத்தம் முதலியன உண்டாகும். பின்னர் மண்ணீரல், கல்லீரல் முதலியனவும் பழுதாகும். காலையில் எழுந்தவுடன் துப்புரவான குளிர்ந்த நீர் பருகி வந்தால் நன்று. மலத்தை அடக்குதல் கெடுதி. பெருங்கேடு. அதிக நீர் பருகுதலும், வயிற்றுக்கு ஓய்வு கொடுத்தலும், இடது பக்கத்தில் சரிந்து படுத்தலும் நல்ல பழக்கங்கள். உபவாசம், ஜலபானம் உடம்புக்கு உறுதுணையானவை. இன்றியமையாதவை.

★ மனிதருடைய தர்மம் நேர்மையாக வாழ்வதேயாகும் ★



# விவேகானந்த வெள்ளம்

## எனது இலட்சியம்

தேசிய வழிகளில் வளர்ச்சி விஸ்தரிப்பு, அபிவிருத்தி என்னும் இரண்டுமாம். உங்கள் உதடுகளை மூடிக் கொண்டு, இதயத்தைத் திறந்து விடுங்கள்.

## கல்வி

கல்வி எல்லாச் சமூக தீமைகளுக்கும் அருமருந்து. தேசத்தின் கல்வி நம்கையில் இருக்க வேண்டும். பரமார்த்திகக் கல்வி, லௌகிகக் கல்வி ஒவ்வொரு வீட்டு வாசலுக்கும் உயர்ந்த கருத்துக்களைக் கொண்டு போதல் வேண்டும். கல்வி மனிதத் தன்மையை அளித்தல் வேண்டும். கழுதையை நன்றாக அடித்தால் அது குதிரையாகி விடும் என்னும் பழைய கருத்துத் தொலைய வேண்டும். மனிதனிடம் ஏற்கெனவே உள்ள பூரணத்துவத்தைப் பிரகாசிக்கச் செய்வதே கல்வி.

---

# மகத்தான கருத்தரங்கம்

மானிப்பாய்க் கோயிற் பற்று முற்காலத்தில் பாரிஸ் நகரம் போல நாகரிகத்துக்குப் பெயர் போன இடமாயிருந்தது. கொழும்பில் ஆங்கிலேயர் ஆரம்பித்த பெரிய கொம்பனிகளின் சிறுப்பர்கள் என்னும் காசாளர்களும், புறோக்கர்கள் என்னும் பெரிய தரகர்களும், வர்த்தக முன்னோடிகளும் மானிப்பாய் பதியினரேதான். சேர் பட்டம் பெற்ற பெரியவர்கள் நிரையும் அப்பதிக்கே உரியது. மருதடிவிநாயகர், கிறீன் மருத்துவ இல்லம், மானிப்பாய் இந்து, மானிப்பாய் மகளிர், மெமோறியல் கல்லூரிகள் அங்கே பெருமை பெற்றன. மறுமலர்ச்சிச்சங்கம் மகாத்மா காந்தியடிகளோடிணைந்த முறைகளை நினைவுபடுத்தும் மன்றம். சமூகசேவை, தமிழ்ச்சேவை செய்பவர்கள் அதன் அங்கத்தவர்கள்.

அவர்கள் அவ்வூர்க்கூட்டுறவாளருடன் சேர்ந்து, அன்று 30-6-84 ஆம் நாள் நடத்திய விவசாயக் கருத்தரங்கை மில்க்வைற் தொழிலதிபர் கோயில் மேளம் போல் ஆரம்பித்து வைப்பப் பெரிய வித்துவான்கள் நிபுணர்கள் பகல் முழுதும் நன்றாக வாசித்து அருமையாக விளக்கினார்கள். உதவிப்பணிப்பாளர் கிருஷ்ணபிள்ளை விவசாயப் பகுதிக்கே பெரிய ஒளி விளக்கு. அரிய பல கருத்துக்களை அள்ளி வீசி ஆலாபனம் செய்தபோது அனுபவம் வாய்ந்த கமக்காரர் அங்காங்காந்த வாயுடன் கேட்டுப் பல காரியங்களை அறிந்தார்கள். கமநல சேவை உதவி ஆணையாளர் பரமலிங்கம் அவர்களும், காப்புறுதிச் சபைப்பிராந்திய பணிப்பாளர் சிவகுரு அவர்களும் விளாசினார்கள்.

சென்ற மழையினால் யாழ்ப்பாணத்தில் 40 கோடி ரூபா நட்டம். நிலம் தாக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட முடியாதிருக்கிறது. விளைவும் தரமும் குறைகின்றன. சிறுபோக தானியங்கள் குறைகின்றன. பீட்கிழங்கு, பம்பாய் வெங்காயம் ஆயிரக்கணக்கான கிலோ விதைத்தும் நிலைமை சீரில்லை. நெல்லு, பயறு, உழுந்து நன்றாக விளையவில்லை. குரக்கன், மரவள்ளி தலைதூக்குதல் ஒரு ஆறுதல். விதைவெங்காயத்துக்குப் புகழ்தந்த இடங்களிலே நிலைமை சீரில்லை.

விதை நெல் கிடைப்பது கடினமாயுள்ளது. கைகொடுக்கும் உருளைக்கிழங்கும் நட்டத்தில் உள்ளது. எமக்கு 2000 தொன் விதைகளாவது வேண்டும். எங்கள் பிரதேசத்தில் வரப்பிரசாதமாய முருங்கையை இதுவரை எவரும் பெருமளவில் தோட்டமாக அல்லது தோப்பாகப் பயிரிடவில்லை. வற்றலாக்கி ஏற்றுமதி செய்யப் பெரிய வாய்ப்பு இருக்கிறது. களி கூடிய இனம் எங்கும் பயிராக வேண்டும்.

குளந்திருத்தல் பெருமளவில் ஊர்கள் தோறும் நடைபெறல் வேண்டும். அரிமா சங்கத்தார் ஆரம்பித்துள்ளமை நன்று. மில்க்வைற் தொழிலதிபர் போதியளவு மண்வெட்டிகள், தாச்சிசட்டிகள் இரவல் தர என்றும் ஆயத்தம்.

மா, முந்திரிகை, மாதுளை நன்றாகப் பரவுதல் வேண்டும். இவை ஒட்டைச் செவியால் கேட்டு எழுதிய ஒரு சில வரிகள். மறுமலர்ச்சியாளரும் மில்க்வைற் தொழிலதிபரும் மேலும் ஊர்கள்தோறும் இப்படியான கருத்தரங்குகள் நடத்த உத்தேசம்.

---

# அமெரிக்க சைவம்

கொலம்பஸ் என்னும் மாலுமி அமெரிக்காவில் காலடி வைப்பதற்கு முன்னரே அங்கே நாகரிகமுற்ற மக்கள் வாழ்ந்து உலர்ந்து போன சமுதாயம் நிலவியது. பண்டைக் காலச் சைவசமயசூழல் அமரிக்காவில் நிலவியது. பின்னர் மங்கியது. மறுபடி உலகமறிய ஒளிவீசத் தொடங்கிவிட்டது.

கருங்கற் கோயில்கள், சிவன், சக்தி, விஷ்ணு, பிள்ளையார், முருகன் முதலான மூர்த்திகள் யாவும் ஆகமவிதிகளுக்கமைய கைதேர்ந்த சிற்பாசாரிகளால் செய்யப் பெற்றுள்ளன.

நந்தியைப்பற்றிக் கேட்கத் தேவையில்லை. பதினாறு தொன் நிறையுள்ள நந்தி பழையகாலத்துச் சோழர் பாணியில் செய்யப் பெற்றுள்ளது. கழுத்தில் நிரை நிரையாக மணிகள் செதுக்கப்பெற்ற அற்புத வேலைப்பாடு பிரமிப்பை உண்டாக்குவது.

# சுந்தரர் செந்தமிழ்



சைவப்பற்று, தமிழ்ப்பற்று நாட்டுப் பற்று மிகுந்த சுந்தரர் தாம் தோன்றிய திருநாவலூரின் பெருமையை மறப்பதுமில்லை, மறைப்பதுமில்லை. நாவலூரன், நாவலர்கோன் என்றெல்லாம் நயம்படப் பாடுமவரை நாவலர் எனவும் வழங்குவர். அவர் வித்தகம் பேசிய விதத்தைச் சிவபெருமானே வியந்தார். அவர் நாடெல்லாம் புகழ வாழ்ந்து பணிபுரிந்த நாவலூராளி. சிவபெருமான் அவரோடு பல விளையாடல்களைச் செய்து ஏச்சு, பேச்சு, புகழ் அமைந்த திருப்பதிகங்கள் கேட்டுக் குளிர்ந்தவர். அவர் ஊராளி மாத்திரமன்றி நாடாளி, கோன், வேந்தன், மன்னன் என்றெல்லாம் தம்மைக் கூறுபவர்.

சுந்தரர் ஆரூரருமாவர். ஆரூரரின் சிவ அன்பு பெரிது. தோழமை அன்பு, அது முதலில் ஆட்பட்ட அன்பு. மீளாவடிமையன்பு. இறைவனுக்கே ஆளாய அன்பு. அவர் திருவெண்ணெய் நல்லூரிலேயே அடிமையாகிவிடுகிறார். "அத்தா உனக்கு ஆளாயினி யல்லே னெனலாமே" என்கிறார். திருத்துறையூரில் தவநெறி வேண்டித் தொழுது பாடுகிறார். அவர் வேண்டிய தவநெறி தாடி மீசை முறுக்கேறிய தலைமயிர், தண்டுகமண்டலம் கொண்டதல்ல. அவர் கேட்டது உள்ளார்ந்த நெறி. ஒழுகலாறு. மெய்யுணர்வு. அவாவறுத்தல். "உயிர் உடலைப் பிரிந்து போவது நிச்சயம்" என்று நிலையாமையைச் சொல்லிச் சிவக் கொழுந்தினைச் சென்றடை மனமே என்று மனத்தைத் திருத்துகிறார். இயற்கையைத் திருமேனியாகக் கொண்ட இறைவனிடத்தில் பலவித பறவைகளையும் மிருகங்களையும், மீனினங்களையும் சிறப்பித்துச் செந்தமிழ் பாடிய பெரியவர் சுந்தரர். அவர் தமக்கு முன் தோன்றி வாழ்ந்து தொண்டு செய்த பெரியவர்களைப் பெயர் கூறித் திருத்தொண்டர்த் திருத்தொகை பாடியருளாவிட்டால் நமக்கு நாயன்மார் திறம் தெரியாமல் மறைந்து போயிருக்கும்.

## அயடின்

அயடின் என்பதை மருந்து என்பதா அமுதம் என்பதா? அயடின் வெட்டுக்காயத்துக்கு மருந்து தான். ஆனால் அது நம் உடம்பிலே அமுதத்தின் துளியாக அமைந்துள்ளது. அது உடம்பில் உண்டாவது நம்முடைய ஆக்கத்துக்காகவே. உணவுகளில் இஞ்சி, வெங்காயம், முட்டை, மிளகு, மல்லி, இன்னும் பழங்களில் அப்பிள், தக்காளி, திராட்சை முதலியவற்றிலும் அயடின் உண்டு. மகாத்மா காந்தியடிகள் விரும்பிய ஆட்டுப்பாலில் உண்டு. மீன் வகைகளிலும் உண்டு.

அயடின் முன்னர் இருந்தது தான். ஆனால் அதை மூலகமாக முதலிற்கண்டவர், பிரான்ஸ் நாட்டவரான டி கோர்ட்டிஸ் என்பாராவர். நெப்போலியனின் படைகளுக்கு வெடியுப்பை ஆய்ந்தபோது 1812ஆம் ஆண்டில் அயடினை அறிந்தார். கடற்சாதாளையில் அயடின் இருப்பதை அறிந்து வர்த்தகத்துறைக்கு வழிகாட்டினர். இன்று வெடியுப்பு சில்லி நாட்டில் பெருந்தொகையாகவுண்டு.

அயடின் உடம்புக்கு உறுதிபயப்பது. கடற்கரையில் அயடின் கலந்த காற்று நுரையீரலைச் சேர்கிறது. கடற்கரையில் உக்கிய சாதாளையில் அயடின் உண்டாவது இயற்கை. அயடின் குறைபாட்டினால் காய், கழலை, வீக்கம் உண்டாகின்றன. உடம்பில் உள்ள சுரப்பிகளுள் தைறொயிட் என்பதற்கு அயடின் தேவையானது. அயடின் குறைவினால் வீக்கம் கழலையாக வளருகிறது.

அயடின் மருந்தாகிப் புற்றுநோயைக் குறைக்கும். அயடின் குறைவினால் நோயை எதிர்க்கும் தன்மை குன்றிப் பல நோய்கள் பீடிக்கின்றன. தடிமன் சுரம் முதலிய அயடின் இல்லாவிடத்துப் பீடிக்கின்றன. அயடின் கிருமி நாசினியாயும் உள்ளதென்பர். இரத்தபுஷ்டிக்கு அயடின் இன்றியமையாத வஸ்து.

# செய்நன்றி ஒருநாளும் மறக்கவேண்டாம்

கர்ணன் என்னும் குழந்தை பெரியவீட்டுப் பிள்ளை: ஆனால் அக்குழந்தை அநாதையாய்க் கிடக்கக்கண்ட தேர் ஓட்டி ஒருத்தன் அதனைக் கொண்டு சென்று வளர்த்து வந்தான். தேரோட்டிமைந்தனான கர்ணன் அரண்மனையில் செல்லப்பிள்ளையாய் உலாவி, இளவரசர்களுடன் நண்பனாயினான். இளவரசர் பயின்ற வில்வித்தை முதலிய வீரச் செயல்களைக் கர்ணனும் பயின்று சிறந்த வீரனாயினான். இளவரசர்களான துரியோதனன் துச்சாதனன் முதலானோர் கர்ணனின் நண்பர்களாயிருந்தார்கள். சிலர் கர்ணனைத் தேரோட்டிமைந்தன் எனப்பரிகாசம் செய்தனர். அதைப் பொறாத துரியோதனன் கர்ணனை அங்கதேசம் என்னும் பிரதேசத்துக்கு அரசனாக்கினான்.

சில காலம் செல்லத் துரியோதனன் முதலானோருக்கும் அவர்களின் உறவினரான பாண்டவர்கள் என்னும் ஐந்து சகோதரர்களுக்குமிடையில் யுத்தம் மூண்டது. அதில் கர்ணன் பங்கு பற்றாமல் இருக்கவேண்டும் என்று சிலர் தடுத்தனர். அதற்குக் கர்ணன் சொன்னான், "அநாதையாய்க்கிடந்த என்னை அன்புடன் வளர்த்து, வீரனாக்கி, அரசனாக்கிய துரியோதனனுக்கு உதவியாக யுத்தம் செய்து மரணம் அடைதலே எனக்குப் பெரிய கடமையும் தருமமுமாகும்" இவ்வாறு கூறிய கர்ணன் துரியோதனனுக்காக வீரப்போர் புரிந்து உயிரைக்கொடுத்தான்.

## உங்களுக்குத் தெரியுமா? விடைகள்

1. 27000 கலன் 2. வெப்பகாலம் 3. திரவத்தின் வாயுதான் எரியும் 4. அல்பா, பீற்றா, காமா 5. மேலே போவது 6. பத்திலொரு குதிரைவலு 7. கூடும் 8. பட்டுத்துணி 9. இலையான் 10. நான்கு அங்குலம் 11. எண்ணாயிரம் 12. இராணி ஈ 13. ஐந்து செக்கன் 14. வாசமுள்ள மலர் 15. பசுமை, மஞ்சள் 16. உண்மை 17. ஓடிக்கோலன் 18. நாணல் 19. கள்ளியினம் 20. வெளவால் 21. கஸ்பியன் 22. ஆங்கிலக் கால்வாய் 23. டானியூப் 24. மெடினா 25. பிறசிடியம்.

★ மனித முன்னேற்றத்துக்குத் தர்மம் உதவுகிறது ★

# உங்களுக்குத் தெரியுமா?

( விடைகள் வேறிடத்தில் )

1. ஒரு ஏக்கர் நிலத்தில் ஒரு அங்குலம் பெய்த நீர் எவ்வளவு ?
2. குளிர்காலம், வெப்பகாலம் சத்தத்தின் விரைவு எதில் அதிகம் ?
3. திரவப் பதார்த்தம் எரியுமா ? எரியாதா ?
4. றேடியக் கதிர்கள் என்பன யாவை ?
5. பந்து மேலே போகிறது, கீழே வருகிறது வேக அதிகம் எது ?
6. மனிதனின் சத்தி எத்தனை குதிரை வலு?
7. கறள்பிடித்த இரும்பின் நிறை கூடுமா? குறையுமா?
8. எந்தத் துணி எரிவதால் நச்சுவாயு உண்டாகும்?
9. செக்கனுக்கு 300 முறை இறகு அடிக்கும் பிராணி எது?
10. அவுஸ்ரேலிய கறையானின் நீளம் என்ன ?
11. எறும்புகள் எத்தனை வகைப்படும் ?
12. தேனீக்களில் நீண்ட காலம் வாழ்வது எது ?
13. எறும்புகள் ஒரு அடி தூரம் ஊர்வதற்கு நேரம் ?
14. தேனீக்கள் விரும்பும் மலரினம் எது ?
15. தேனீக்கள் பெரிதும் விரும்பும் மலரின் நிறம் ?
16. பிரவிடா பத்திரிகைப் பெயரின் கருத்து ?
17. கோலோன் நகரத்து நீர் என்பது ?
18. சேற்று நிலத்தில் முளைக்கும் புல்லினம் ?
19. மணற் பாங்கான நிலத்தில் உண்டாகும் தாவரம் ?
20. பாலூட்டும் பறவை என்பது ?
21. வொல்கா நதி சேரும் கடல் ?
22. பிரெஞ்சுக்காரர் லாமன்சி என்பது ?
23. கருங் கடலை வந்தடையும் ஆறு ?
24. நபிகள் நாயகத்தின் அடக்கம் உள்ள நகரம் ?
25. ரஷ்ய மந்திரிகள் சபையின் பெயர் ?

## ஸ்தபதிகள் கைவரிசை

சைவசமயமும் சைவசித்தாந்த சாத்திர ஞானமும் மெத்தவளர்ந்து வரும் அமெரிக்காவிலே, ரெக்ஸாஸ் மாநிலத்திலே, பீர்லந்து நகரிலே ஐந்து ஏக்கர் நிலத்திலே நான்கு வருடகாலத்திலே அதி அற்புதமான மீனாட்சி கோயிலை உருவாக்கிய பெருமை ஆந்திரநாட்டினரான கணபதி, புருஷோத்தம் என்னும் ஸ்தபதிகளுக்குரியதாகும்.

இவர்களைத் தொடர்ந்து அமெரிக்காவிலிருந்து மூவரும், இந்தியாவிலிருந்து எழுவரும் வந்திருந்தார்கள். கர்ப்பக்கிருக மூலத்தான முக்கிய வேலைகளைச் செய்வதற்குத் தமிழ் நாட்டிலிருந்து ஸ்தபதி முத்தையா என்பாரும் அவருக்கு உதவியாக மாதவாச்சாரி என்பாரும் வந்திருந்தார்கள்.

வங்கியில் கடனாகப்பெற்ற இரண்டுலட்சம் டொலர், அன்பர்கள் அள்ளிச்சொரிந்த காணிக்கை, உண்டியல் முதலிய நிதியோடு வேலைகள் விரைவாக ஆரம்பிக்கப் பெற்றன.

## மண்டைதீவு ஏற்றுமதிக் கிராமமாக மாறும்?

இலங்கையெங்கும் மாதிரிக் கிராமங்கள் உருவாகும் வேளையில் முன்மாதிரிகள் அமைந்த நிலத்தில் முன்னோடிகள் வாழ்ந்த மண்ணில் முன்னேற்றக் கிராமங்கள் அமைவதில் சந்தேகம் என்ன ? எப்பவோ 1935 ஆம் ஆண்டளவில் ஊர்காவற்றுறை வடபகுதியில் பெரியதுறை முகமாக அமையப் பெருவாய்ப்பு உருவான வேளையில் அதனைப் பருத்தித்துறை, காங்கேயன்துறை எனத்திசை திருப்ப முயன்றவர்களால் ஒரு துறைமுகமும் வடக்கில் உருப்படியாகவில்லை. முன்னர் சீனக்கப்பல்கள், அராபிய மரக்கலங்கள் வந்து போன ஊர்காவற்றுறை கோட்டை கொத்தளங்கள் அமைந்த பெருமை பெற்றபோது, பெரிய துறையாகவில்லை.

தீவுப்பகுதி மக்கள் தமிழோடும் சைவத்தோடும் பனையோடும் பாடுபட்டவர்கள். பனைத்தொழில், பன்னவேலை ஏழுதீவுகளிலும் ஒவ்வொருவகையில் பாரம்பரியமாக வளர்ந்துவந்தன. தீவுப்பகுதி ஆண்கள் பெண்கள் குடிசைத் தொழிலாகப் பன்னவேலையைக் கொண்டனர். ஏற்றுமதியில்லாவிட்டாலும் சந்தைப்படுத்தும் வாய்ப்பைப் பெற்றவர்கள். இனி ஏற்றுமதி வாய்ப்பையும் பெறுவார்கள். இதில் தமிழ்நாட்டுப் பனைநிபுணர் சம்பந்தம் அவர்களுக்கும், மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா அவர்களுக்கும் முக்கிய பங்குண்டு.

## அங்கும் இங்கும்

### நாடகவித்தகர்

ஆங்கில இலக்கியவளத்தில் சேக்ஸ்பியருக்குப் பின் ஜோர்ச் பேனாட்ஷோ நாடகநூல்களை அதிகமாக எழுதியவராவர். இவர் நாடகங்கள் பெரும்பாலும் வசன நடையில் எல்லோருக்கும் விளங்குவனவாயுள்ளன. சென்யோன், பிக்மலியன், மேஜர் பாபரு, டொக்டேர்ஸ் டிலெமா, ஹாட் பிறேக் ஹவுஸ், ஆம்ஸ் அன் த மான், தி அப்பிள் காட், கன்டிதா, சீசர் அன் கிளியபத்திரா, த டெவில்ஸ் டிசைப்பிள், மான் அன் சுப்பமான், மிசிஸ் வாறன்ஸ் புறொபசன். முதலியன அவரின் நாடகங்களாகும்.

### கடற்படைவீரர்

மகாவீரனான நெப்போலியனை முறியடித்த நெல்சன் உலகப்புகழ் பெற்ற கடற்படை வீரன். அவர் வரிசையில் ஹார்டி, யோன்யேவிஸ், ஏர்ல் ஒவ் சென் வின்சென்ற், றொட்னி, ஹீட், ஹெள, தொன்பிரிட்ச், கொலிங்வூட். முதலானோரைக் கூறுவர்.

### இந்திய மாநிலங்கள்

இன்றைய இந்தியாவில் 16 மாநில அரசுகள் உள்ளன. இன்னும் 9 ஐக்கிய பிரதேசங்களும் உண்டு. தமிழ்நாடு ஒரு மாநிலம். கேரளம் ஒரு மாநிலம். இப்பிரதேசங்கள் மாநிலங்கள் எங்கும் மத்திய அரசு ஒரே அரசியற் கோட்பாட்டில் ஆட்சி செய்கிறது.

★ மாணாக்கருடைய தர்மம் கல்வி கற்பதாகும் ★

## சுத்தம்

### நோய் தரும் இலையானைப் போக்குதல் வேண்டும்

1. ஈயினை ஒழிப்பதாலே
 இல்லத்தில் தூய்மை தங்கும்
 நோயினைத் தவிர்க்க லாகும்
 நுகர்ந்திட லாகும் இன்பம்!

2. குப்பையில், கழிவு நீரில்
 குந்திடும், பரந்து பின்னே
 அப்பிடும் உணவில் ஈயை
 அழித்திடு மருந்து வைத்தே.

3. கழிவுநீர் தேங்கி டாமல்
 கவனமாய் இருத்தல் வேண்டும்
 ஒழியுமேல் குப்பை கூளம்
 ஒழித்திடும் ஈயின் கூட்டம்.

— நாரா. நாச்சியப்பன்

---

முற்றொடர்:

## சைவம் மணக்கும் தமிழ் நூல்கள்

99. சிவபூசாவிதி
 முத்துவேலாயுத தேசிகர்
100. சிவபூசாவிதி
 குமாரசுவாமிக்குருக்கள்
101. சிவபூசை விளக்கம்
 சிதம்பரம்
102. சிவபூசை அகவல்
 கமலை ஞானப்பிரகாசர்
103. சிவபூசை அந்தாதி
 சுப்பிரமணியபிள்ளை
104. சிவபூரணுதி தோத்திரம்
 வேங்கடநாயுடு
105. சிவபெருமான் அலங்காரம்
 முத்துக்குமாரசுவாமிக் குருக்கள்
106. சிவபெருமான் அநுக்கிரக விதி
 சங்கரலிங்கம்பிள்ளை
107. சிவபெருமான் இரட்டை மணிமாலை
 கபிலதேவ நாயனார்
108. சிவபெருமான் திருவந்தாதி
 கபிலதேவ நாயனார்
109. சிவபெருமான் மும்மணிக்கோவை
 இளம்பெருமானடிகள்
110. சிவபோக சாரம்
 ஞானசம்பந்த தேசிகர்

— தொடரும்

## Learn these sayings of greatmen

1. Laws grind the poor, and rich men rule the law
2. Wisdom is only found in truth
3. A pure hand needs no glove to cover it
4. Nothing is impossible to a willing heart
5. Light is the task when many share the toil
6. Labour conquers all things
7. Whatever advice you give be short
8. A picture is a poem without words
9. Anger is a short of madness
10. He who has begun has half done
11. Caution is the eldest child of Wisdom
12. Language is the dress of thought
13. Posterity pays every man his honour
14. The nearer the dawn the darker the night
15. Children are born to be happy
16. The best of healers is good cheer
17. Pride, the never failing vice of fools
18. Men of few words are the best of men
19. Truth hath a quiet breath
20. It is a wise father that knows his own child
21. Better a witty fool than a foolish wit
22. Poverty is the step-mother of genius
23. What is done wisely is done well
24. Can man be free if woman be a slave
25. Sons are anchors of a mother's life

---

## பண்பால் உயர்ந்த பெண்பால்

பிரெஞ்சுக்காரி கத்தோலிக்க மதத்தவர், மைக்கேல் என்னும் பெற்றோரின் புதல்வி. பிரெஞ் மொழியில் இராம காதை படித்து மனம்மாறி, மதம்மாறி இந்திய கலை கலாசாரம் பயிலப் பூனா நகரம் புகுந்து சமஸ்கிருதம் பயின்று, தத்துவசாத்திரத்தில் வித்துவாம்சினியாகித் தாரா என்னும் தாய்க் கடவுளின் பெயர் புனைந்து, இந்தியப் பண்பாட்டில் சேலை கட்டி, குங்குமம் அணிந்து, குனிந்து வணங்கித் தெய்வம் தொழும் இவர், பலவித யோகங்களும் பழகி வேதாந்தம், விசிட்டாத்துவைதம் முதலியனவும் பயின்றுள்ளார். குரு விசுவாசம் முத்தியடைவதற்குக் குறுக்கு வழி என்பதில் இப்பெண்மணிக்குப் பூரண நம்பிக்கை பிறந்துள்ளது. இந்து சமய வாழ்வு உலகின் முதன்மையானது என்கிறார். இவரின் கோலத்தையும் போக்கையும் விரும்பாத கணவன் இவரைப் புறக்கணிக்கவே, இவர் அதுவும் நன்மைக்கே என்று கருதி ஒதுங்கி வாழ்ந்து தொண்டு புரிகின்றார். இந்து சமயத்தில் எல்லாம் இருக்கிறது. அது தன்னிறைவானது. பூரணமானது என்று போற்றுகின்றார்.

### பெண்கள் கவனம்!

| | | |
|---|---|---|
| ஆச்சாரியா | — | பெண்ணாசிரியை |
| ஆச்சாரியாணி | — | ஆசிரியரின் மனைவி |
| உபாத்தியாயா | — | பெண்ணாசிரியை |
| உபாத்தியாயனி | — | ஆசிரியரின் மனைவி |
| விதுஷி | — | வித்துவப் பட்டம் பெற்ற பெண் |

---

★ பெரியவர் கூறியதை ஏற்பதே சுருதிப்பிரமாணம் ★

## அறிந்து கொள்ளுங்கள்

1. புறபுறச் சமயங்களுள் பிரதானமானவை.
2. பௌத்தத்திலும் பழைய புறச்சமயம்.
3. பௌத்தம் ஆதாரமாகக் கொண்ட பொருள்.
4. புத்தர் போதித்த பெரிய நூல்கள்.
5. பிடகம் என்பதன் கருத்து.
6. புத்தமதத்தை நன்றாகப் போதித்தவர்.
7. சமண சமயத்தின் மற்றொருபெயர்.
8. சமண சமயத்தைப் போதித்தவர்.
9. சமணர் கூறும் தெய்வம்.
10. சமணரின் தல விருட்சம்.
11. பௌத்தரின் தல விருட்சம்.
12. கௌதமரின் பிறப்பிடம்.
13. மகாவீரரின் பிறப்பிடம்.
14. மகாவீரரின் இளமைப் பெயர்.
15. சமணகுருமாரின் பாரம்பரியப் பெயர்.
16. சமணம் கூறிய அரும் பெருங் கருத்து.
17. பௌத்தர் ஆன்மா எனக்கருதுவது.
18. புத்தர் போதனை செய்த பழையமொழி.
19. புத்தர் போதித்த பூரணத்துவநிலை
20. நிர்வாணம் என்பதன் பொருள்.

---

1. பௌத்தம், சமணம் 2. சமணம் 3. புத்திதத்துவம் 4. ஞானபிடகம், விநயபிடகம், அவிதர்ம பிடகம் 5. பூக்கூடை 6. சித்தார்த்த கௌதமர் 7. சைனம் 8. மகாவீரர் 9. சினன் என்னும் அருகர் 10. அசோகு 11. அரசு 12. கபிலவஸ்து 13. வைசாலி 14. வர்த்தமானர் 15. தீர்த்தங்கரர் 16. புல்பூண்டுகளுக்கும் உயிர் உண்டு 17. ஞானம் 18. பாளி 19. நிர்வாணம் 20. துன்பக்காட்டிலிருந்து வெளியேறுதல்

## அமெரிக்காவில் அம்மன் கோயில்

அமெரிக்காவில் ரெக்ஸாஸ் மாநிலத்தில் மீனாட்சி கோயில் கம்பீரமாக எழுந்துள்ளது. அமெரிக்கர் அதனை சக்தி கோயில் எனவே வழங்குகின்றார்கள்.

சென்ற 27-7-82 ஆம் நாளில் மாகும்பாபிஷேகம் வெகுவிமரிசையாக நடைபெற்றது. ஆயிரக்கணக்கான அமெரிக்கர் சைவப் பொலிவோடு அதில் பங்கு பற்றி உள்ளம் பூரித்தார்கள்.

ரெக்ஸாஸ் மாநிலத்து பீர்லந்து நகர முதல்வர் அன்றைய தினத்தை மீனாட்சி தினம் எனப் பிரகடனப் படுத்திப் பக்திச் சூழலை உண்டாக்கினார் என்றால் சைவ சமயத்தவருக்கு வேறென்ன குறை.

கும்பாபிஷேக கிரியைகள் ஏழு நாட்கள் இரவு பகலாக நடைபெற்ற வைபவத்தை நகர முதல்வர் மதிப்புக்குரிய ரொம்றீட் வெகுவாகப் புகழ்ந்துள்ளார்.

பிரதிஷ்டா வைபவங்களை முறையாகச் செய்வதற்கு வேதசிவாகமம் வல்லவர்களான குருக்கள்மார் இந்தியாவிலிருந்து இதற்கெனப் போயிருந்தார்கள். இவர்களுக்கு உதவியாக பிறஸ்பேக், நியூயோர்க், நியூஒலியன்ஸ் குருக்கள்மாரும் பங்கு பற்றினர்.

கும்பாபிஷேகத்துக்குரிய மங்களகரமான தினத்தை காஞ்சிப்பெரியார் கணித்துக் கொடுத்தமை பெரும் பேறாகவும் வரப்பிரசாதமாகவும் வாய்ப்பாகவும் இருந்தது.

அமெரிக்க சைவர்களுக்கு இன்று கும்பாபிஷேகத்தின் மகத்துவம் நன்றாக விளங்கும். அவர்கள் பலவித ஹோமங்களையும், ஆகுதிகளையும் கருத்தூன்றி அறிந்துள்ளார்கள்.

இந்த வைபவத்தில் அவர்கள் 14 வித ஹோமங்கள் நடத்தியுள்ளமை, யந்திரங்கள், விக்கிரகங்கள் பிரதிட்டை செய்தமை, அபிடேக ஆராதனைகள் செய்தமை வெகு சிறப்பானவை என்பர்.

எட்டு மூலிகைகள் சரக்குகள் கொண்டு அரைக்கப் பெற்ற அட்டபந்தனத்தின் அருமை பெருமைகளை அமெரிக்கர் விஞ்ஞான அறிவுகொண்டும் ஆராய்ந்து மகிழ்ந்துள்ளார்கள்.

பொன், செம்பு முதலியவற்றால் செய்யப் பெற்ற தகடுகளில் எழுதப் பெற்ற மந்திரங்கள் கோயிலில், சூழலில், வழிபடுவோர் இதயத்தில் ஒருவித அதிர்ச்சியை உண்டாக்கும் என்பதை உணர்ந்துள்ளனர்.

---

## சிவபிரான் செய்தருளிய எட்டு வீரச்செயல்கள்

சுந்தரமூர்த்திநாயனார் சிவபெருமான் செய்தருளிய அட்டவீரட்டம் என்னும் எட்டு வீரச்செயல்களையும் குறிப்பிடுவர். அவர் தமது திரிசூலத்தால் கரியநிறம் பொருந்திய அந்தகாசுரனை அழித்தார். தம்மீது மலரம்புகளை ஏவிய மன்மதனைத் தமது நெற்றிக்கண் பார்வையால் எரித்தார். மார்க்கண்டேயருக்காக அவர் இயமனை உதைத்து வீழ்த்தினார். மிக்கவலிமையையுடையவனும் பெரிய வாயையுடையவனுமான சலந்தரனைச் சக்கரத்தால் இருபிளவாக்கினார். தம்மை மதியாது பெருவேள்வி செய்த தக்கனின் வேள்வியைத் தகர்த்து அவனையும் தண்டித்தார். எல்லோருக்கும் இடையூறு செய்துவந்த திரிபுரத்தவர்களின் கோட்டைகளைச் சாம்பராக்கி அவர்களைப் பணி செய்யப்பணித்தார். அடக்கமில்லாது பணிபுரிந்த பிரமதேவனின் ஒருதலையைக்கிள்ளி அவனை நான்முகனாக்கினார். கயாசுரன் என்னும் மதம் பொருந்திய யானை வடிவினனை உதைத்து உருட்டி அவனைக்கொன்று தோலை உரித்துப் போர்வையாக்கினார்.

அட்டவீரட்டானங்கள் என்னும் எட்டுத்திருத்தலங்களின் பெயர்களையும் நாமறிந்திருத்தல் நன்றாகும்.

1. பிரமன் சிரம்கொய்தது — திருக்கண்டியூர்
2. அந்தகாசுரனைச் சங்கரித்தது — திருக்கோவலூர்
3. திரிபுரத்தை எரித்தது — திரு அதிகை
4. தக்கன்வேள்விதகர்த்தது — திருப்பறியலூர்
5. சலந்தராசுரனைச் சங்கரித்தது — திருவிற்குடி
6. யானையை உரித்தது — திருவழுவூர்
7. காமனைக் காய்ந்தது — திருக்குறுக்கை
8. யமனை உதைத்தது — திருக்கடவூர்

★ பகுத்தறிவைப் பயன்படுத்தல் யுக்திப்பிரமாணம் ★

# முருகனே முன்னின்று காத்தல் வேண்டும்



அஞ்சுமுகந் தோன்றியுள்ளது. அல்லோலகல்லோலப் படும் வேளையில் ஆறுமுகந் தோன்றுதல் வேண்டும். அஞ்ச வேண்டாம் என அபயகரங் காட்டி அருளுதல் வேண்டும். முன்னர் தேவர்களின் துயரந் தீர்க்க வந்தருளிய வருகை மீண்டும் கிடைத்தருள வேண்டும். திருக்கரத்தில் உள்ள வேலுக்கு வேலை கொடுத்தருள வேண்டும். எமக்கு வேலை, வேலை வணங்குவதாதல் வேண்டும்.

நல்லூரா நம்மைக் காத்தருளப் பள்ளி எழுந்தருள வேண்டும். நாடு நலிகின்றது. நானிலத்து முதல் நில மாய குறிஞ்சி நிலக் கோவே வருக! கொஞ்சுந் தமிழுக் குக் கூத்தாடும் குமரனே வருக. தமிழர்க்குக் குருவே வருக.

'' பரமர் திருச் சடைப் புனலும் பரை திருக் கைம் மலரும்
படிந்தழகு விளங்குதிருப் பதநினைந்து நினைந்தெஞ்
சிரமிசைவைத் தருணகிரி திருப்புகழாற் புகழ்ந்த
திருமறையின் பொருளுரைத்த சிவகுருவே யென்போம்
சரவணத்தில் வந்துதித்த தனி முதலே யென்போம்
தமிழ்விளக்கே பரஞ்சுடரே தமனியப் பொன்னுருவே
திருமுருக நினதிளமைச் செவ்வியையாங் காணச்
சிறியேமுக் கருள்புரியுந் தெள்ளமுதே யென்போம்.''

— சுவாமி விபுலானந்தர்

## நாடும் வீடும் வாழ நல்லதையே செய்யுங்கள்

நல்லன செய்ய இயலாதாயின் தீவினை செய்யாதிருங் கள். நல்வினை புகழ்ச்சிக்கு இடமாயிருப்பதும் தவிரச் செய்பவனை நல்ல வழியிற் செலுத்துவதற்குந் துணையா யிருக்கும்.

'' நல்லது செய்தல் ஆற்றிராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின், அதுதான்
எல்லாரு முவப் பதன்றியும்
நல்லாற்றுப்படூஉ நெறியுமா ரதுவே.''

— புறநானூறு

## பனையபிவிருத்திப் பணி

பனையபிவிருத்திப் பணி தொடர்ந்து நடைபெறுவ தற்கு மில்க்வைற் தொழிலதிபர் என்றும் ஆயத்தமா யிருக்கிறார். விதைகளைச் சேகரித்துத் தந்தால் உங்கள் பெயரால் பனை மரங்கள் பெருமளவில் வளர்வதற்கு வசதிகள் செய்யலாம். பங்குபற்றும் அபிமானிகளுக்கு உபகரிப்பின் அளவுக்குப் பரிசுகள் உண்டு.

## வேம்பு பெருக்க வேண்டும்

வரண்ட பகுதிகளில் வாழ்வளிக்கும் வேப்ப மரம் பெருந் தொகையாக வேண்டும். மில்க்வைற் நாற்றங் காலில் நல்ல இனத்து வேப்பங் கன்றுகள் உண்டு. உங் களுக்குத் தேவையான அளவுக்குத் தரலாம்.

## அப்பியாசக் கொப்பிகள்

மில்க்வைற் தயாரிப்பில் உருவான பாடசாலை அப்பியாசக் கொப்பியில் மீற்றர் அளவை நுணுக்கமாக அச்சேறியுள்ளது. தரமான காகிதத்தில் தயாரிக்கப்பட்ட இந்த அப்பியாசக் கொப்பிகள் மில்க்வைற் மேலுறை களுக்குப் பரிசாகக் கிடைக்கும். மேலுறைகளைச் சேகரித் துக் கொண்டுவாருங்கள்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## முருங்கை.....

சேர்த்துவைப்பது ஒரு கறி. இன்னொன்று வெறும் மல்லித்தூள் அரைத்துவைக்கும் சரக்குக்கறி. முருங்கை வளவுமூலைகளில் நின்றால் எவ்வளவு பயன் தருகிறது. அதன் இலையை வாரத்துக்கு இரு முறை யாவது வறுத்து உணவோடு சேர்த்துக்கொள்ளல் அக்காலத்துப் பெருவழக்கு. தென்னிலங்கையில் கத்துறு முறுங்கா என்னும் அகத்தியிலை சேராத சோறு குறைவு. நாங்கள் முருங்கையிலையைக் கூட்டுக்கஞ்சியில் சேர்த்துப் பூரண உணவாகக் கொண்ட காலம் ஒரு காலம்.

தமிழ் நாகரிகத்தோடு நெருங்கிப் பயன் தந்து வந்த முருங்கைக்கு இதுவரை எவரும் தோட்டம் அமைக்கவில்லை என்பது ஒரு குறையென்று விரிவாக் கப் பெரியவர் மானிப்பாய் கருத்தரங்கிற் சுட்டிக் காட்டினர். முருங்கையை எங்கும் பரப்புவதில் வடக்கில் புங்குடுதீவுச் சர்வோதயத்தாரும், மில்க் வைற் தொழிலதிபரும் கொண்டிருந்த வேகம் குறைந்துவிட்டது. வலிகாமம் வடபகுதியும், தென் மராட்சிப் பகுதியும் முருங்கையபிவிருத்தியில் தீவிர மாக ஈடுபடுதல் வேண்டும். மிகவதிகமாக முருங் கைக்காய் கிடைத்தால் மெதுவாக வறுகி வற்றலாக் கிப் பாதுகாத்து வேண்டிய வேளையில் பயன் செய்ய லாம். வசதிப்பட்டால் ஏற்றுமதி செய்யலாம். வட கம் தயாரிக்கலாம். நாடெங்கும் நற்புணி புரிவ தற்கு மாதர்கள் தலையுயர்த்திய இடங்களில் ஓய்வு நேரவேலை, நல்ல ஊதியத்தைத் தருவதாக. முருங்கை நாகரிகம் இரத்தத்தில் இரும்புச்சத்தை உண்டாக் கும். உற்சாகம் தரும்.

## ஆசியுரை

மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்தின் ஆதரவில் அவ்வூரவர் வெளியிட்ட சிறப்பு மலர் ஒன்றுக்குத் தொழி லதிபர் கனகராசா ஆசியுரை வழங்கி, ஊர்கள்தோறும் இப்படியான மலர்கள் வெளிவருதல் நாட்டுக்கு நன்மை தரும் என்று கூறினர்.

★ ஒரு பொருளை நேரில் அறிவது காட்சிப்பிரமாணம் ★

## வேப்பம் விதைகள் வேண்டும்

நீங்கள் எவ்வளவு வேப்பம் விதைகள் தந்தாலும் நல்ல விலைகொடுத்து வாங்குவதற்கு மில்க்வைற் தொழிலகம் காத்திருக்கிறது.

## கடையிற் சுவாமியார்

யாழ்ப்பாணத்தின் பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஞானச் சுடர் விளக்காய்ப் பிரகாசித்த முத்தானந்தர் என்னும் கடையிற் சுவாமிகள், கண்கண்ட கடவுளாய், நடமாடுந் தெய்வமாய் நிலவி, இங்கேயொரு சித்தர் பாரம்பரியத்தை விட்டுப் போனவர். அவர் சமாதியடைந்த இடம் நீராவியடி கடையிற்சாமி ஒழுங்கை, அங்கே எழுந்த அருமையான ஆலயத்தின் கும்பாபிஷேகம் 29-8-1984 புதன் காலை ஆறு மணி தொடக்கம் நடைபெறும். இப்பணி நிறைவேற அன்பர்கள் ஆதரிப்பாராக.

## நாவலர் காலத்து நாடகங்கள்

ஆறுமுகநாவலர் அவர்கள் காலத்தில் நல்லூர்த் திருவிழா வேளையில் ஊர்கள்தோறும் பல நாடகங்கள் நடைபெற்ற செய்தியை அவர் குறிப்பிட்டுள்ளார். "சேணிய தெருவிலே இரணிய நாடகம், கள்ளியங்காட்டிலே அரிச்சந்திர விலாசம், கந்தமடத்தடியிலே தமயந்தி விலாசம், நெல்லியடியிலே ஏதோ ஒரு கூத்து, பறங்கித்தெருவிலே ஏரோது நாடகம், சங்குவேலியிலே இராம நாடகம், மானிப்பாயிலே தருமபுத்திர நாடகம்."

## நோயணுகா விதிகள்

நோய் வந்தபின் நீக்குவதிலும் பார்க்க அது வருமுன் காப்பது சுலபம். இதைக் கருதியே பழைய காலத்துச் சித்தர்கள் நோயணுகா விதிகள் பாடியுள்ளார்கள். நமனுர்க்கு ஏது வேலை நாமிருக்கும் இடத்தில் என்று வீரம் பேசினுர்கள். அந்த வீரத்தில் சந்திரனைப் பிடித்துப் பந்தாய் அடிப்போம் என்ருர்கள். காட்டு மிருகங்களைக் கையால் அடித்துத் துரத்தினுர்கள். யோக வலிமையினுலே சிவனை நெஞ்சில் இணைத்தார்கள். யோகம் என்பதும் இணைப்புத்தான். காற்றினுலும், நீரினுலும், உணவினுலும், சுற்றுடலாலும் நோய்கள் உண்டாகின்றன. இவற்றைத் தூய்மையாக்கிக் கொண்டால் நோய் வராது. காற்று மாசடையாமல் கவனமெடுத்தலும், நல்ல முறையில் சுவாசித்தலும் நன்மை பயப்பன. சுவாசிக்கும்போது சுவாசத்தை ஒழுங்குபடுத்துவதற்கு, பிராணுயாமம் நல்லது. படுக்கும்போது இடது கைப் பக்கம் சரிந்து படுத்தல் முறை. நீர் பருகும்போது அதை நன்ருகக் காய்ச்சி ஆறவிட்டு வடித்துப் பருகுதல் முறை. உணவு கொள்ளும்போது வேளை அறிந்து தேவை அறிந்து அளவோடு அமைதியாக, ஆறுதலாக உண்ணல் முறை. உணவுந்தான் சமவுணவாய்ச் சத்துகள் எல்லாம் சரிவர அமைந்ததாயிருத்தல் அவசியம். சத்துகளில் உயிர்ச்சத்து என்னும் விற்றமின்ஸ் அடங்கிய இலை, தழை, கீரை, காய்கறி, பழங்கள் என்பன அடங்குதல் வேண்டும்.


நீலந்தோய்க்கும் வேலைச்சிரமம் வேண்டாம்.

உங்கள் சிருடைகள் மிகுந்த வெண்ணிறமடைவதற்குச்
சிறந்த வழி – சிரமமில்லாத வழி – சிக்கனமான வழி
ஒன்றே ஒன்றுதான். அது

மில்க்வைற் நீலங்கலந்த நீலக்கட்டிகளை
சம்பூரண சலவைக்காக உபயோகித்தலாகும்.

பளிச்சிடும் வெண்மைக்கு பாவியுங்கள்

மில்க்வைற் நீல சோப்




10 மேலுறைகளை அனுப்பி மில்க்வைற் செய்தி,
யோகாசனப் புத்தகம் – விளக்கப் படம்
அல்லது வெளியீடுகளில் ஒன்று
இவற்றில் ஏதாவதொன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

250 நீல சோப் மேலுறைகளைக் கொடுத்து
உரையுடன் கூடிய ஒரு திருக்குறள்
புத்தககதை இனமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.


## அம்மன் ஆலயத்தில் சிரமதானப் பணி

திருநெல்வேலி முத்துமாரியம்மன் கோயிலில் நல்லூர் திரிசாரணர் செய்த சிரமதானப் பணிக்கு மில்க்வைற் தொழிலதிபர் உறுதுணையாய் இருந்தார். திரிசாரணர் வாழ்க.

## சைவம் பொலிக! தமிழ் தழைக்க!

யாழ்ப்பாணம் கோப்பாய் கல்வி வட்டாரத் தொகுதியில் படிப்பார்வம் ததும்பும் மாணுக்கர் மாணுக்கியருக்குப் படிப்புவசதி செய்யும் மூலவள நிலையத்துக்கு மின் இணைப்பு வைபவம் சைவத் தமிழ்ப் பாரம்பரியத்தில் சோமாஸ்கந்த கல்லூரிச் சூழலில் மங்களகரமாக நடைபெற்றது. பெரியவர்கள் பலர் பங்குபற்றிச் சிறப்பித்து வழிகாட்டியுள்ளார்கள்.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப்புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-8-84.